பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 04 2024 **THURSDAY** **6.30 PM**

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

2. தமிழகத்தில் இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 303 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

3. மக்களவைத் தேர்தல் பாதுகாப்புப்பணியில் ஈடுபடும் காவல்துறையினர் தபால் வாக்கு செலுத்தும் பணி இன்று தொடங்கியது.

4. புனித ரமலான் பண்டிகை இன்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் உதித் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<>>>>>

மக்களவைத் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பபதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் பரிசுப்பொருட்களை பறக்கும் படையினர் பறிமுதல் செய்து வருகின்றனர். வருமானவரித்துறையினரும் வங்கிக்கணக்குகளில் மேற்கொள்ளப்படும் பணப்பரிமாற்றத்தை கண்காணித்து வருகின்றனர்.

செங்கல்பட்டு பரனூர் சுங்கச்சாவடியில் துணை ராணுவத்தினர் உதவியுடன் வாகன சோதனை நடத்தப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். தமிழகத்தில இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டுசெல்லப்பட்ட 303 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும்பட்சத்தில் அவை சம்பந்தப்பட்டவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெளிவுபடுத்தியுள்ளது. மாநிலத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர் பெயர் மற்றும் சின்னத்தை பொருத்தும் பணி இரண்டாவது நாளாக இன்றும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேட்பாளர்களின் முகவர்களின் முன்னிலையில் இப்பணிகள் நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர். தேர்தல் பாதுகாப்புப்பணியில் ஈடுபடும் காவல்துறையினர் தபால் வாக்கு செலுத்தும் பணி இன்று தொடங்கியது. சேலம் மாவட்டத்தில் காவலர்கள் ஆர்வத்துடன் தபால் வாக்குகளை செலுத்தியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மக்களவைத் தேர்தலில் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மாநிலம் முழுவதும் நடைபெற்று வருகின்றன.

சென்னை நீலாங்கரையில், நீச்சல் வீரர்கள் கடலுக்குள் 60 அடி ஆழத்திற்கு சென்று வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதுதொடர்பான காணொலி பொதுமக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

தேனி மாவட்டத்தில், ஆயிரத்து 500 கிலோ எடையுள்ள ஐஸ் கட்டியில் உருவாக்கப்பட்ட 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் விழிப்புணர்வு வாசகம் பொதுமக்களின் கவனத்தை வெகுவாக ஈர்த்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தொகுதி வாரியாக எமது செய்தியாளர்கள் வழங்கும் இந்த பகுதியில் இன்று இடம்பெறுகிறது மதுரை மக்களவைத் தொகுதி

<<<<<>>>>>

புனித ரமலான் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் இன்று கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டி தலைவர்கள் பலர் வாழ்த்து செய்தி விடுத்துள்ளனர்.

<<<<<>>>>>

தென் தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

வரும் ஞாயிற்றுக்கிழமை தொடங்கி, செவ்வாய்க் கிழமை வரை மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட தமிழகத்துக்கு உட்பட ஒரு சில பகுதிகளில் வெயிலின் தாக்கம் இயல்பைவிட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் அதிகரிக்கக்கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

திருவண்ணாமலை மாவட்டத்தில் முதல் முறை வாக்காளர்களை தொலைபேசியில் தொடர்புகொண்டு வாக்களிக்க வலியுறுத்தும் அழைப்பு மையத்தை ஆட்சியர் திரு பாஸ்கர பாண்டியன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------------

பெரம்பலூர் மாவட்டத்தில் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் காணொலி மாவட்ட நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ளது.

---------------------

மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்காக திறக்கப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு ஆயிரத்து 500 கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் உதித் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

கிர்கிஸ்தானின் **Bishkek-ல்** இன்று தொடங்கிய இப்போட்டியின், ஆடவர் 57 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், வடகொரியாவின் **Kum Hyok Kim**-ஐ வென்றார்.

65 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் ரோஹித்தும், 70 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் **Abhimanyou** –வும், 97 கிலோ எடைப்பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் விக்கி-யும் தோல்வியடைந்து வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

-------

உலக கலப்பு இரட்டையர் டேபிள் டென்னிஸ் ஒலிம்பிக் தகுதிச்சுற்று போட்டியில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - மணிக்கா பத்ரா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

----------------------

பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியில் பங்கேற்க இந்தியாவின் அஷ்வினி பொன்னப்பா – **Tanisha Crasto** இணை தகுதி பெற்றுள்ளது.

------------

கனடாவில் நடைபெற்றுவரும் **Candidates** செஸ் போட்டியின் ஆறாவது சுற்று முடிவில் இந்தியாவின் குகேஷ் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

-------------------

**Dusseldorf** சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Yashaswani Ghorpade** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

------------

சீனாவின் **Changsha**-வில் நடைபெற்றுவரும் **Billie Jean King** கோப்பைக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் சீன தைபே-யை வென்றது.

<<<<<END>>>>>